**மார்ச் - 8**

**"தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்"**

**- 1கொரி 12 : 18**

கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அவயவமாவது வேறொரு அவயத்தின் தேவை தனக்கில்லை என்று சொல்லவோ, அச்சரீரத்தின் ஊழியத்தில் தான் செய்வதற்கு ஏதுவாகிலும் ஒன்றுமே இல்லை என்றும் சொல்லக் கூடாது. நமது மகிமையான தலையின் வழி நடத்துதலின் கீழ் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, அவருக்கு ஊழியஞ் செய்ய ஆசையாயிருக்கும் ஒவ்வொரு அவயமும் அவ்வாறு செய்யலாம். பலனளிப்பதற்கான சமயம் வரும்போது, பவுல் அப்பொல்லோ இவர்கள் உபயோகமாயிருந்ததில் எந்த அளவிற்கு கர்த்தரின் வேலையில் அதிகமாக திறமையுள்ள சகோதரர்களுக்கு ஊழியஞ் செய்து, அவர்களை உற்சாகப்படுத்தி, ஆதரித்த ஆகில்லா, பிரிஸ்கில்லா போன்ற சில தாழ்மையுள்ள ஜனங்கள் போற்றப்படக் கூடியவர்கள் என்று யாருக்குத் தெரியும்.

**- Z '03, 59 (R 3152).**

தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரதத்தில் வைக்கிறார் என்ற படிப்பினையை மாத்திரம் நாம் கற்றுக் கொள்ளக் கூடுமானால் உடனொத்த அவயவங்களின் அந்தஸ்தைக் குறித்து பொறாமைப் படாமலிருப்பதுடன் அவர்கள் இடத்துக்குரிய சலுகைகளை நிறைவேற்றுவதில் நாம் சந்தோஷமாக அவர்களோடு ஒத்துழைப்போம். தேவன் தமது சித்தத்தின்படி ஒவ்வொரு அவயவத்தையும் சரீரத்தில் வைக்கிறார். அவ்விடத்திலிருந்து மற்றவர்களுக்கு மிகவும் உத்தமமாக உதவவும் கூடும். அங்கே தனக்கு மிகவும் உத்தமமான உதவி மற்றவர்களிடமிருந்துக் கிடைக்கும்.

**-P '34, 31.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

1கொரி 12:5-31; 3:5; 4:1-16; ரோம 12:3-8; 8:29; எபே 1:22,23; 2:15; 4:3-6, 11-15; 5:23,30; கொலோ 1:24; 2:10; அப் 2:36; எபி 3:3, 6; வெளி 1:13; 2:1.

**கோபுர வாசிப்பு** : Z '13, 295 (R 5321).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் உடன் அங்கத்தினர்களிடம் எவ்வாறு நடந்து கொண்டேன்? நான் அவ்வாறு செய்தது ஏன்? பலன் என்ன?